**உத்தரானந்த மாவத்தை மற்றும் ஸ்லேவ் ஐலண்ட் புகையிரத நிலையம் என்பவற்றில் மேம்பால புகையிரத பாதை நிர்மானிப்பு செயற்திட்டம் - 2021**

உத்தரானந்த மாவத்தை மற்றும் ஸ்லேவ் ஐலண்ட் புகையிரத நிலையம் என்பவற்றில் மேம்பால புகையிரத பாதை நிர்மானிப்பு செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. சிறி உத்ரானந்த மாவத்தை மற்றும் நீதி அக்பர் மாவத்தை என்பவற்றில் கடக்கும் தர அளவிலுள்ள போக்குவரத்து நெரிசலினை குறைத்தல் மற்றும் பாலடக்சா மாவத்தை, சிறி முஹம்மட் மாக்கன் மாக்கார் மாவத்தை, சிறி ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை (ஏ004 வீதி), மலே வீதி, சேர்ச் வீதி மற்றும் ஸ்லேவ் ஐலண்ட் பகுதியிலுள்ள ஏனைய வீதிகள் என்னவற்றின் இயக்கத்தன்மையினை மேம்படுத்தல் என்பனவற்றிற்காக ஓர் ஒருங்கனைந்த போக்குவரத்து முகாமைத்துவ திட்டத்தினை தயாரித்தல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 9,133.25 மில்லியனாக காணப்பட்டதுடன் மொத்த கிரயமும் இலங்கை அரசாங்கம் நிதியளிக்க இணங்கியிருந்தது. செயற்திட்டத்தின் நிர்மான வேலைகள் 2021 யூன் 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 யூன் 15 இல் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிகள் கூட்டுமொத்தம் ரூபா 344.2 மில்லியன் தவறுதலாக 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிநிலமைக்கூற்று, நிதி மாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பனவற்றில் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதிகளாக காட்டுவதற்கு பதிலாக கடனாக காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட நிதிகளாக சீராக்க கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | அனைத்து நிதி மூலங்களும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.01 இன் பிரகாரம் பதிவு செய்யப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | உருப்படி | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | மேம்பாலங்களின் நிர்மானம். | ஒப்பந்தப்பொதி 1 மற்றும் 2 இன் நிர்மானம் முறையே 2022 ஜுன் 20 மற்றும் 2022 ஜுன் 28 இல் பூர்த்திசெய்ய எதிர்பார்கப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்டமானது ஒப்பந்தப்பொதி 1 மற்றும் 2 இன் கீழ் முறையே இலக்கிடப்பட்ட பௌதீக செயலாற்றல் 87 மற்றும் 85 சதவீதத்திற்கு எதிராக 58 மற்றும் 57 சதவீதத்தினை மாத்திரமே அடைந்திருந்தது. | ஒப்பந்ததாரர்கள் கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்படும் வரை வேலைகளை நிறுத்த படிமுறைகளை எடுத்துள்ளார். | செயற்திட்டத்தின் குறித்த இலக்குகளை அடைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காணி சுவீகரிப்பு | காணி சுவீகர்ப்பு சட்டத்தின் பிரகாரம் பிரிவு 2 அறிவுறுத்தல் விநியோகிக்கப்பட்டிருந்தும், நிர்மான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தப்பொதி 1 மற்றும் 2 இல் முறையே 50 சதவீதம் மற்றும் 35 சதவீத பௌதீக செயலாற்றல் அடையப்பட்டிருந்தது. மேலும் காணிகளின் முன்கூட்டிய இடமறிதல் கூட அத்திகதியில் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | தற்போது பிரிவு 2 பிரசுரிக்கப்பட்டுள்ளது டன் 38(அ) பிரசுரிக்க ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. | காணி சுவீகரிப்பு வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தப்பொதி 1 இன் ஒப்பந்ததாரர் இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை பெற்றுக்கொள்வதில் தாமதம் காரணமாக 2022 மே 12 இலிருந்து அவர்களது நிர்மான வேலைகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தனர். ஓப்பந்தப்பொதி 2 இன் ஒப்பந்ததாரர் கூட 2022 ஏப்ரல் 19 இல் சாத்தியமான விளைவுகள் மற்றும் வேலைகளின் இடைநிறுத்தல்களிற்கான ஓர் அறிவுறுத்தலை வழங்கியிருந்தமை கூட மேலும் அவதானிக்கப்பட்டது. எனவே கொடுப்பனவுகளில் தாமதம் காரணமாக எதிர்காலத்தில் மேலதிக கிரயங்கள் ஏற்பட சாத்தியமாவதுடன் நிர்மான வேலைகளின் பூர்த்தியாக்கல் கூட தாமதிக்கலாம். | உடன்பட்டனர். | மேலதிக வேலைகளை குறைப்பதற்காக நிர்மான வேலைகளை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுமொத்தம் ரூபா 4.4 மில்லியன் மாறல் கட்டளை 01 இன் கீழ் மஸ்ஜிதுல் ஜாமியா வீதியிலுள்ள நில மேற்பரப்பிடல் வேலைகளின் கொடுப்பனவிற்காக அனுமதிக்கப்பட்டிருந்தது அது செயற்திட்டத்தினது புனரமைப்பு வேலைகளின் வேலைப்பரப்பிற்கு அப்பால் காணப்பட்டது. | பாதுகாப்புக் குழு பொறியியலாளர்களின் வேண்டுகோள் கூறப்பட்ட வீதியுடன் தொடர்புபட்ட நிலமேற்பரப்பிடலை செய்வதற்கு தீர்மானித்திருந்ததாகும். | நிதிகளை வேலைப்பரப்பிற்குள் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களினை அனுமதிப்பதனூடாக ஓர் வேறான கொடுப்பனவு உருப்படிகள் அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை உரிய ஒப்பந்ததாரரின் சொந்த கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான ஒப்பந்தப்பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது. அதன்படி கூட்டுமொத்தம் ரூபா 19.85 மில்லியன் கொடுப்பனவு உருப்படி 1.3.2 இன் கீழ் இரண்டு ஒப்பந்ததாரர்களிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | தொகையனது ஏலமிடலிற்கான பின்னிணைப்பில் கூறப்பட்டிருக்கவில்லை, இவ் உபபிரிவு பயன்படுத்தப்படமாட்டாது. எனவே இது ஓர் வேலை வழங்குனர் தேவைப்பாடாக கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | ஏல ஆவணங்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | செப்தம்பர் மாதத்திலிருந்தான 12 இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களிற்கான கூட்டுமொத்தம் ரூபா 2,589.24 மில்லியன் 2022 மே 30 இல் உள்ளவாறு இரண்டு ஒப்பந்ததாரர்களிற்காகவும் நிலுவையாக காணப்பட்டது. அதன்படி எதிர்காலத்தில் அதிகளவான மேலதிக தாமத | செயற்திட்டத்தை செய்வதற்கு கட்டுநிதி கிடைக்கப்பெறாமை செயற்திட்டத்தினை தாமதிப்பதற்கு காரணமாக இருந்தது. | எதிர்காலத்தில் சாத்தியமான தாமதவட்டி கொடுப்பனவுகளை குறைப்பதற்காக விடையங்களை நெறிப்படுத்த நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | வட்டிக்கொடுப்பனவுகளை செலுத்த ஓர் சாத்தியமுள்ளது. | மேலும் இரண்டு ஒப்பந்ததாரர்களிற்கும் எதிர்காலத்தில் அதிக மேலதிக தாமத வட்டி கொடுப்பனவுகளை கொடுப்பதற்கு ஓர் சாத்தியம் காணப்படுவது கூட உண்மையாகும். | எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | ஒப்பந்த பொது நிபந்தனைகளின் உபபிரிவு 14.7 மற்றும் 14.8 இன் பிரகாரம் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்பொதி 01 மற்றும் 02 இன் கீழாக முறையே ரூபா 52.09 மில்லியன் மற்றும் ரூபா 11.78 மில்லியன் கொடுப்பனவு தொகையினை வேண்டியிருந்தனர். | ஒப்பந்ததாரரினால் ரூபா 52.09 மில்லியன் வேண்டப்பட்டிருந்தமை ஏற்றுக்கொள்ளப்பட்டது . | எதிர்காலத்தில் சாத்தியமான தாமதவட்டி கொடுப்பனவுகளை குறைப்பதற்காக விடையங்களை நெறிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |